### தோழி மகளிர் விடுதிகள், பட்டாசு தொழிலாளர் பிள்ளைகளுக்கு கல்வி நிதி! தொழிலாளர்களின் பிரச்சினைக்கு உடனடி தீர்வு கண்டதால்

# முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்றென்றும் மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கிறார்!

## சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் பேச்சு!



சென்னை, செப். 4 -

**சட்டப்பேரவையில் தொழிலாளர் மானியக் கோரிக்கை மீதான விவாவத்தில் முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் பேசுகையில் தொழிலாளர் பிரச்சினைக்கு உடனடி தீர்வு கண்டதால் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்றென்றும் மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கிறார் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது: -**

பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது அன்பான வணக்கம். சமூக நீதிக்கு வித்திட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, மே தினத்தை ஊதியத்துடன்கூடிய விடுமுறையாக அறிவித்தவர், நேப்பியர் பூங்காவிற்கு மே தினப் பூங்கா எனப் பெயர் சூட்டியவர், அங்கு மே தின நினைவுச் சின்னத்தை அமைத்து தொழிலாளர்கள் அஞ்சலி செலுத்தும் நிலையை உருவாக்கியவர், 'உடன் பிறப்பே' என்ற ஒற்றைச் சொல்லில் ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் தட்டி எழுப்பிய சிற்பி, (மேசையைத் தட்டும் ஒலி)

நவீன தமிழ்நாட்டை உருவாக்கியவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களே, பொறுமை, நிதானம், சகிப்புத் தன்மை, அயராத உழைப்பு, தீர்க்கமாக முடிவெடுக்கும் திறன், எதையும் தாங்கும் இதயம், எல்லோரிடத்திலும் அன்பு, கருணை, கடமை தவறாமை, எப்போதும் உற்சாகத்தோடு பணியாற்றும் தன்மை என்ற நற்பண்புகளைத் தன்னிடத்தே கொண்டு திராவிட மாடல் ஆட்சியை கடந்த ஐந்தாண்டுகள் சிறப்பாக நடத்தி, தமிழ்நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்திற்காகக் கடுமையாக உழைக்கும் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி)

மனதாரப் பாராட்டுகிறேன் என்று மாண்பமை உச்ச நீதிமன்ற நீதியரசர் ரமணா அவர்களால் பாராட்டப் பெற்றவர், திராவிட மாடல் ஆட்சி நடத்திய கழகத் தலைவர், என் நெஞ்சம் நிறைந்த ஆருயிர் அண்ணன் அவர்களுக்கு எனது அன்பான வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தில் நான் 41 ஆண்டுகளாக இருந்து வருகிறேன். எனது அரசியல் வானில் எனக்குக் கலங்கரை விளக்கமாக இருப்பவர், இன்னும் 50 ஆண்டு காலத்திற்குத் திராவிட இயக்கத்தின் வெற்றி வரலாற்றை எழுதயிருக்கின்ற எங்களது ஈரோடு எரிமலையாய் நடந்து வரும் இளைஞர், எங்களின் சின்னக் கலைஞர், தந்தையின் கட்டளைகளைத் தலையில் ஏந்தி, தமிழ் மக்களின் நலனை மனதில் ஏந்தி, ஏற்றப் பொறுப்பினை ஏற்றவுடன் செயல்படுத்தி வரும் எங்கள் இளம் தலைவர், என் நெஞ்சம் நிறைந்த ஆருயிர் அண்ணன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞரணிச் செயலாளர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வணங்குகிறேன். முன்னாள் அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் அண்ணன் கே.என்.நேரு அவர்களுக்கும், முன்னாள் அமைச்சர், எதிர்க்கட்சிக் கொறடா, எனது அரசியலுக்கு எப்போதும் உற்ற துணையாக இருக்கின்ற அண்ணன் எ.வ.வேலு அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்வரிசையில் அமர்ந்திருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வெற்றிக்காக எனது திட்டக்குடி தொகுதிக்கு இரண்டு முறை வருகை தந்து தேர்தல் பிரச்சாரம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தொகுதிக்கு வருகை தந்த அண்ணியார் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் அவர்களுக்கும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் அண்ணன் தொல். திருமாவளவன், எம்.பி. அவர்களுக்கும் வணக்கம். எனது வெற்றிக்காக உழைத்த ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தொகுதிப் பொறுப்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் அனைவருக்கும் எனது வணக்கம்.

**திட்டக்குடி வாக்காளர்களுக்கு நன்றி!**

நாடாளுமன்றத்திற்கு ஒரு முறையும், மாவட்ட பஞ்சாயத்துக் குழுத் தலைவர் பொறுப்பிற்கு இரண்டு முறையும், இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டமன்றத்திற்கு ஐந்து முறையும் எனக்கு வாக்களித்து, என்னை வெற்றிபெறச் செய்த எனது திட்டக்குடி வாக்காளப் பெருமக்களுக்கும், பொது மக்களுக்கும் எனது நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய வாய்ப்புகளை பல முறை எனக்கு வழங்கியும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் பொறுப்பை எனக்கு வழங்கிய கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பத்திரிகை, ஊடகத் துறையின் அனைத்து சகோதரர்களுக்கும் அன்பான வணக்கம்.

கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் தொழிலாளர் நலன், தொழிலாளர்கள் பாதுகாப்பு, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் வழங்குதல், கட்டுமானத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், நல வாரியங்களை உருவாக்குதல், தொழில் அமைதியை உறுதி செய்தல், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குதல், தொழிற்பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்துதல், தொழிலகப் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு சாதனைகளைப் படைத்த அரசுதான், திராவிட மாடல் அரசு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**தொழிலாளர் நலன் பாதுகாக்கப்பட்டது!**

ஒரு நாட்டினுடைய பொருளாதாரம் உயர வேண்டுமென்றால், ஓர் அரசில், தொழிலாளர்கள் நலனும், நல்ல அமைதியான சூழலும் இருந்தால்தான், அந்த நாட்டில், அந்த அரசாங்கத்தில் தொழில் வளர்ச்சி சிறப்பாகப் பெருகும். அந்த அடிப்படையில், கடந்த ஐந்தாண்டுக் காலமாக தமிழ்நாடு ஒரு சிறப்பான அமைதியான மாநிலமாக இருந்த காரணத்தினாலும், தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்பட்ட காரணத்தினாலும்தான் 11.19 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைய முடிந்தது என்று சொன்னால், அதற்கு திராவிட மாடல் நாயகர் அண்ணன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்தான் காரணம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 35 இலட்சத்து 9 ஆயிரத்து 833 தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்கள் கொடுத்த ஆட்சி 'திராவிடமாடல்' ஆட்சி!

இன்றைக்கு அமைச்சர்கள் அறிவிப்புகளையெல்லாம் அறிவித்தார்கள். அதையும் நான் பார்த்துக்கொண்டிருந்தேன். ஆனால், கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், தொழிலாளர் நலத் துறை மூலமாக தொழிலாளர்களுக்கு என்னவெல்லாம் நாங்கள் செய்திருக்கிறோம் என்பதை சுருக்கமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு தொழிலாளர்கள் இருந்தாலும், குறிப்பாக பட்டாசுத் தொழிலாளர்களின் பிரச்சினைதான் எப்போதுமே பொதுவான பிரச்சினை. அவர்கள் ஓர் ஆபத்தான சூழலில் பணியாற்றக்கூடிய ஒரு தொழில் அது. தமிழ்நாட்டில் 1,500-க்கும் அதிகமான பட்டாசு ஆலைகள் இயங்கி வருகின்றன. அதில் குறிப்பாக, விருதுநகர் மாவட்டத்தில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டாசு ஆலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் எப்போது விபத்துகள் ஏற்படுமென்றால், மார்ச், ஏப்ரல், மே மாதங்களில்தான் ஏற்படும். அது வெயில் காலமாக இருக்கிற காரணத்தால், ஆலைகளில் இரசாயனங்கள் கலக்கப்படும்போது ஏற்படும் உராய்வுதான் விபத்துகள் ஏற்பட காரணமாக அமைந்துவிடுகின்றன.

அவ்வாறு இரசாயனங்களை கலப்பதற்கு பெயர் *mixing*; வெடிக்குள் அதை நிரப்புவதற்குப் பெயர் *filling*; அவ்வாறு நிரப்பிய பிறகு அதை மூடுவதற்குப் பெயர் *finishing*; அது முடிந்த பிறகு *packing*. இவ்வாறு, *mixing, filling, finishing and packing* இவையெல்லாம் முடிந்த பிறகுதான் *dispatching*. இந்த நிலைகளில்தான் அங்கு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆகவே, இப்படிப்பட்ட பணிகளைச் செய்கின்ற ஒவ்வொரு தொழிலாளியும், தனது உயிரைப் பணயம் வைத்துத்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆலைகளில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்ற காரணத்தினால், முதலமைச்சராக இருந்த எங்கள் அண்ணன் தளபதி அவர்கள் எங்களையெல்லாம் அழைத்து, 'கணேசன், இவ்வாறு அடிக்கடி விபத்துகள் ஏற்படும்போது, அந்தக் குடும்பத்திற்கு 4 இலட்சம் நிதியுதவி கொடுப்பதால் மட்டும் அந்தக் குடும்பத்தின் கண்ணீரைத் துடைத்துவிட முடியாது; ஆகவே, நீங்களெல்லாம் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார். நான், வருவாய்த் துறை அமைச்சராக இருந்த கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள், தொழில் துறை அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு அவர்கள் ஆகியோர் அங்கு சென்று கருத்தரங்கு நடத்தினோம்.

இந்த விபத்துகளை எப்படிக் குறைக்கலாம் என்பது குறித்த கருத்தரங்கு நடத்தியபோது, பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. ஆனால், நான் அந்தக் கருத்தரங்கில் பேசியபோது, '1,500-க்கும் மேற்பட்ட ஆலைகள் இருந்தாலும், 500-க்கும் மேற்பட்ட ஆலைகள் விபத்துகளே இல்லாமல் இயங்குகின்றன. அந்தத் தொழிற்சாலைகளின் உரிமையாளர்களை நீங்கள் சந்தித்து, அவர்கள் எவ்வாறு ஆலைகளை நடத்துகிறார்கள் என்று கேட்டறிந்து, அந்த வழிமுறைகளுடன் நீங்களும் நடத்த வேண்டும்' என்று கூறினேன். ஆனாலும், முதலமைச்சராக இருந்த அண்ணன் தளபதி அவர்கள், உடனடியாக விருதுநகர் மாவட்டத்திற்குச் சென்று ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்று முடிவெடுத்து, அந்த மாவட்டத்திற்கு வந்தார்கள்.

**பட்டாசு தொழிலாளரை சந்தித்த மு.க.ஸ்டாலின்!**

அப்போது நானும், அமைச்சர் அண்ணன் K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களும், அண்ணன் தங்கம் தென்னரசு ஆகியோரும் பார்த்தோம். அனைத்து இடங்களையும் முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்த பிறகு, அங்கு ஒரு பெண் தொழிலாளியைச் சந்தித்துப் பேசினார். 'என்னம்மா உங்களுக்கு குறை இருக்கிறது, என்ன வேண்டும்' என்று கேட்டார். 'ஐயா இதுவரையிலும், பட்டாசுத் தொழிற்சாலையில் நாங்கள் உயிரைப் பயணம் வைத்து வேலை செய்து கொண்டிருக்கிறோம். எங்களைப் பார்க்க வந்த முதல் முதலமைச்சர் நீங்கள்தான், அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று அந்த அம்மையார் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் சொன்னவுடனேயே முதலமைச்சர் அவர்கள், ஈரம் கசிந்த கண்களோடு அங்கிருந்து புறப்பட்டார்.

என்ன வேண்டுமென்று கேட்டவுடனேயே, 'ஐயா இந்தத் தொழில் செய்யும் போது நாங்கள் ஒருவேளை இறந்துவிட்டால், எங்களுக்குப் பின்னால் எங்களுடைய குழந்தைகள் இந்தத் தொழிலைச் செய்யக் கூடாது. கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று அந்த அம்மையார் சொன்னார்கள். முதலமைச்சர் அங்கிருந்து புறப்பட்டு, ஓய்வில்லத்திற்கு வந்தபிறகு, அன்று மாலையே அரசு அதிகாரிகளையெல்லாம் அழைத்துப் பேசி, பட்டாசுத் தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், தாயும், தந்தையும் இறந்துவிட்டால், அந்தக் குழந்தைகளின் கல்விச் செலவை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்ற உத்தரவைப் பிறப்பித்த முதலமைச்சர் எங்களுடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, 18 வயது வரையில் அவர்களுடைய பராமரிப்புச் செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள்ளும் என்று உத்தரவிட்டு, அன்றையதினமே அரசாணை பிறப்பித்து, 5 கோடி ரூபாயை அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்த முதலமைச்சர் எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நான் ஆட்சிப் பொறுப்பேற்று, இப்போது இளைஞர்களெல்லாம் வந்திருப்பது போன்று, நாங்களும் முதல் முறையாக அமைச்சராகப் பொறுப்பேற்று வந்த காரணத்தினால், இப்படித்தான் நாங்களும், சுறுசுறுப்பாக, துருதுருவெனத்தான் ஓடுவோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்து, இந்தத் தொழிலாளர் துறையில் எந்தெந்த தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்கள் கொடுக்காமல் இருக்கிறது உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்ன காரணத்தினால், மாநில அளவில், மாவட்ட அளவில், மண்டல அளவில் இருக்கின்ற அதிகாரிகளை எல்லாம் அழைத்து, ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தினோம். நடத்தும்போது, 1 இலட்சத்து 7 ஆயிரம் தொழிலாளர்களுக்குக் கல்வி, திருமணம், விபத்து, தனி நபர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் போன்றவை வழங்கப்படாமல் இருப்பது கண்டறியப்பட்டது. கண்டறிந்து, உடனடியாக முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில், YMCA மைதானத்தில், 80 நாட்களுக்குள்ளாக 1 இலட்சத்து 7 ஆயிரம் பேரில் 50 ஆயிரம் தொழிலாளர் களுக்கு ஒரே நாளில் நலத் திட்ட உதவிகளை வழங்கிய அரசு அண்ணன் தளபதி அவர்களுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன்பிறகு, இரண்டு மாதங்கள் கழித்து தலைமைச் செயலகத்தில், முதலமைச்சருடைய தலைமையில், மீதம் இருக்கின்ற 57 ஆயிரம் தொழிலாளர்களுக்கு அந்த நலத் திட்ட உதவிகளையெல்லாம் வழங்கிய அரசுதான் எங்களுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதன்பிறகு, ஊட்டியில், 7-2-2024 அன்று நண்பகல் 12 மணியளவில் கட்டுமானப் பணியின்போது விபத்து ஏற்பட்டு, மண் சரிந்து, ராதா, சங்கீதா, திருமதி சுதா, பாக்கியம், முத்து மீனாட்சி ஆகியோர் மரணமடைந்தார்கள். வழக்கமாக இதுபோன்ற விபத்து நடந்தால், எவ்வளவு நாட்கள் கழித்துப் பணம் கொடுப்பார்கள் என்றால், அதிகாரிகளை அழைத்துக் கேட்டேன், எப்போது பணம் கொடுக்கலாம் என்று கேட்டபோது, 'sir, வேகமாகக் கொடுத்தால் 3 மாதங்களில் கொடுக்கலாம். கொஞ்சம் அவகாசம் எடுத்து கொடுத்தால், 6 மாதங்களில் கொடுக்கலாம்' என்று சொன்னார்கள். நான் அதைக் கேட்டு, உடனடியாக முதலமைச்சர் அவர்கள் என்னைத் தொலைபேசியில் அழைத்து, உடனடியாக நீ ஊட்டி செல்ல வேண்டுமென்று சொன்னார்கள். விமானம் மூலமாகச் சென்று, கோயம்புத்தூரில் இறங்கி, கோயம்புத்தூரிலிருந்து, அப்போது அங்கு பெண் ஆட்சியர் இருந்தார்கள். அவர்களுக்கு *phone* செய்தேன். 'அம்மா நான் வந்து கொண்டிருக்கிறேன், தாமதப்படுத்தக் கூடாது, உடனடியாக அந்தத் தொழிலாளர்களுக்கெல்லாம் நிவாரணத் தொகை வழங்க வேண்டும்' என்று சொன்னேன். இங்கிருந்து சென்றவுடனே, 30 மணி நேரத்திற்குள்ளாக அந்த 5 தொழிலாளிகளுக்கும், நிவாரணத் தொகையை வழங்கிய அரசு தளபதியினுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உதாரணத்திற்கு ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்கிறேன். அதே போன்று கரூரில் *septic tank* வேலை செய்யும்போது ராஜேஷ் குமார் மற்றும் சிவகுமார் ஆகிய இரண்டு பேர் இறந்துவிட்டார்கள். உடனடியாக அன்றைக்கு கரூர் மாவட்டத்தில் ஆட்சியராக இருந்த Dr. T. Prabhushankar, I.A.S. அவர்களுக்கு *phone* செய்தேன். 'Sir, இரண்டு பேர் இறந்துவிட்டார்கள், உடனடியாகக் கொடுக்க வேண்டும். மாதக் கணக்கில் தாமதப்படுத்தக் கூடாது' என்று சொன்னேன். 'Sir, அனைத்து சான்றுகளும் கிடைத்துவிட்டால், உடனடியாகக் கொடுத்துவிடலாம்' என்று சொன்னார். நான் உடனே கேட்டேன், 'Sir, Collector control-லில் தான் கோட்டாட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆட்சியர், VAO உள்ளிட்ட அனைவரும் உங்கள் control-லில் தான் இருக்கிறார்கள். உடனடியாக இதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து உடனடியாகக் கொடுங்கள். நாங்கள் வருவதற்கு தாமதமானாலும் கொடுத்துவிடுங்கள் என்று சொன்னோம். அவர் அனைத்து சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டு, 30 மணி நேரத்திற்குள்ளாக நிவாரணத் தொகை வழங்கிய அரசு எங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, நான் அமைச்சராக பொறுப்பேற்றவுடனே, Foxconn நிறுவனத்தில் ஒரு போராட்டம் நடந்தது. முதலமைச்சர் என்னை அழைத்து 'அந்த நிறுவனத்தில் போராட்டம் நடக்கிறது உடனே செல்லுங்கள்' என்று சொன்னார். நான் இங்கிருந்து அந்த நிறுவனத்திற்குச் சென்றேன். ஏனெனில் நானும் புதிதாக அமைச்சராகப் பொறுப்பேற்றதால், என்ன நடக்கிறது என்று தெரியாது. அங்கு சென்றவுடனே, 5 ஆயிரம் பெண் தொழிலாளர்கள் சாலையில் அமர்ந்து மறியல் செய்து கொண்டிருந்தார்கள். நான் அங்கு சென்று இறங்கியவுடனே, அந்தத் தொழிலாளர்களுடன் நானும் சேர்ந்து தரையில் உட்கார்ந்து கொண்டேன்.

சற்று நேரம் அமர்ந்த பிறகு எழுந்து, எதற்காக நீங்கள் போராட்டம் செய்கிறீர்கள் என்று அவர்களைக் கேட்டேன். அவர்கள், 'Sir இங்கே சரியான விடுதி வசதி இல்லை, கழிப்பறை வசதி இல்லை, தண்ணீர் வசதி இல்லை, போதிய பாதுகாப்பு வசதி இல்லை, உணவு தரமாக இல்லை' என்று சொன்னார்கள். உடனே அங்கிருந்த Collector-ஐ அழைத்துக் கொண்டு, அந்த இடத்திலிருந்த அனைத்துத் தொழிலாளர்களையும் அழைத்துக்கொண்டு, அந்த இடத்திற்குச் சென்று ஆய்வு செய்து பார்த்துவிட்டு, அவர்களை சமாதானம் செய்தோம். அந்த வேலை நிறுத்தம் தொடர்ந்து 2 நாட்கள் நடைபெற்றது.

**மகளிர் தங்கும் தோழி விடுதி!**

ஆனாலும், அவர்களை சமாதானம் செய்து, அவர்களுக்கு உதவிசெய்து, அப்போது உடனடியாக நிறைவேற்ற வேண்டிய பணிகளை எல்லாம் நிறைவேற்றினோம். இப்படி வேலை நிறுத்தம் நடந்த காரணத்தினால்தான், எங்களுடைய முதலமைச்சராக இருந்த அண்ணன் தளபதி அவர்கள் பெண்களுக்காக 'தோழி மகளிர் விடுதி' என்னும் விடுதிகளை, சுமார் 706 கோடி ரூபாய் செலவில், (மேசையைத் தட்டும் ஒலி) 18,000 பெண்கள் தங்குகின்ற வகையில், விடுதிகளைக் கட்டித் தந்த அரசாங்கம் எங்களுடைய அரசாங்கம் என்பதை இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படி நிறைய விஷயங்களைச் சொல்லிக்கொண்டே போக முடியும். அதனால் தொழிலாளர்களுக்கெல்லாம் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் உடனுக்குடன் தீர்த்த அரசாங்கம் எங்கள் அரசாங்கம். இப்படிப்பட்ட அரசாங்கம் நடந்தபோது, நாங்கள் என்னென்ன உதவிகளைச் செய்திருக்கிறோம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதாவது, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், இராமநாதபுரம், திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் 40.87 கோடி ரூபாய் செலவில் அலுவலகங்கள் கட்டிக்கொடுத்தோம். சென்னை, அண்ணா நகரில் தொழிலாளர் நல ஆணையரக அலுவலகத்தைக் கட்டினோம்.

திராவிட மாடல் ஆட்சியில் 7-5-2021 முதல் 31-10-2025 வரையான காலகட்டத்தில், அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் 35,09,833 நபர்களை நாங்கள் பதிவு செய்துள்ளோம். அவர்களுக்கு 3,134.61 கோடி ரூபாய் அளவில் பணப் பலன்களைக் கொடுத்திருக்கிறோம். இந்த 5 வருடங்களில் மட்டும் 35 இலட்சம் நபர்களுக்கு மேலாகப் பதிவு செய்திருக்கிறோம். தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போதுதான், 1996 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில், 15-க்கு மேற்பட்ட நல வாரியங்களை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்தார் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

எங்களுடைய தலைவர் முதல்வராக ஆட்சியில் இருந்தபோது, உப்பளத் தொழிலாளர்கள் நல வாரியம், இணையம் சார்ந்த Gig தொழிலாளர் நல வாரியம் ஆகியவை உருவாக்கப்பட்டன. பெண்கள் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு, *driver* ஆக இருக்கும் பெண்களுக்கு, *auto* வாங்குவதற்கு ஒரு இலட்சம் ரூபாயை முதன்முதலில் மானியமாகக் கொடுத்த அரசு, எங்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது.) பதிவு பெற்ற. . .

கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தில், பணியிடத்தில் மரணம் அடைந்தால், நிவாரணத் தொகை 5 இலட்சம் ரூபாயிலிருந்து 8 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தில் உயிரிழந்தால், ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து உயர்த்தி இரண்டு இலட்சமாகக் கொடுத்தோம். உடலுழைப்புத் தொழிலாளி இறந்துவிட்டால், நிவாரணத் தொகை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து ஒன்றே கால் இலட்சமாக உயர்த்தப்பட்டது. இதுவரையில் இல்லாத ஒரு திட்டமாக, கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்தில் விபத்தில் இறந்துவிட்டால், அந்த உடலைக் கொண்டு செல்வதற்கு, அதாவது அமரர் ஊர்தியோ அல்லது *rail* மூலமாகவோ, வெளி மாநிலத் தொழிலாளியாக இருந்தால் அவருடைய சொந்த ஊருக்குக் கொண்டு செல்வதற்கு, விமானத்தில் கொண்டு செல்வதற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்குகின்ற திட்டத்தை நிறைவேற்றிய அரசாங்கம் எங்களுடைய அரசாங்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**தொழிலாளர் குழந்தைகள் படிக்க நிதி உதவி!**

தொழிலாளர்களுடைய குழந்தைகள், தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றால் 25,000 ரூபாய், பன்னாட்டு அளவில் பங்கு பெற்றால் 30,000 ரூபாய் வழங்குகின்ற திட்டத்தைக் கொண்டுவந்தோம். அதுமட்டுமல்ல, கட்டுமானத் தொழிலாளர்களுடைய குழந்தைகள் MBBS படிப்பதாக இருந்தால், அவர்களுக்கு 50,000 ரூபாய் வழங்குகின்ற திட்டத்தைக் கொண்டு வந்தோம். தொழிலாளர்களின் ஓய்வூதியத்தை 1,000 ரூபாயிலிருந்து 1,200 ரூபாயாக உயர்த்தப்பட்டது எங்களுடைய ஆட்சியில்தான். அதேபோன்று, இணையம் சார்ந்த தொழிலாளர்களுக்கு, Gig தொழிலாளர்கள் 2,000 நபர்களுக்கு *electric scooter* வாங்குவதற்கு 20,000 ரூபாய் மானியம் வழங்கப்பட்டது எங்களுடைய ஆட்சியில் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய ஆட்சியில், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் ஆகியோர் மீட்கப்பட்டனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர்களின் குழந்தைகள் 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை படிப்பதற்கு 1,000 ரூபாய் வழங்கும் திட்டத்தினை முதன்முதலில் அறிமுகப்படுத்திய ஆட்சி எங்களுடைய ஆட்சி. 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 1,000 ரூபாயிலிருந்து 2,400 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, ITI, Polytechnic படிக்கும் மாணவர்களுக்கு 1,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. பட்டப் படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு 1,500 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

அமைப்புசாரா ஓட்டுநர்கள் வாரியத்தில் விபத்தில் மரணம் அடைந்தால், ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. அமைப்புசாரா ஓட்டுநர்கள் வாரியத்தில், ஓட்டுநர்கள் இயற்கை மரணம் அடைந்தால் 20,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது. கட்டுமானத் தொழில்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் திருமணத்திற்கான உதவித்தொகையை 10,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். மகப்பேறு திட்டத்திற்கு 6,000 ரூபாயிலிருந்து, . .

அதுமட்டுமல்லாமல், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்பதற்காக, எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள்—அதாவது, தனியார்—அதாவது, Government-ல் வேலை கொடுப்பது என்பது வேறு, Group I, Group II, Group III, Group IV உள்ளிட்ட TNPSC தேர்வுகள்மூலம் வேலைகளை நாம் கொடுக்கிறோம். ஆனால், அதுமட்டுமல்லாமல், தனியார் தொழில் நிறுவனங்களுடன் வேலை வாய்ப்பு முகாமை நடத்த வேண்டுமென்று, எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்ட காரணத்தினால், முதன்முதலில் 349 வேலை வாய்ப்பு முகாம்களை மொத்தமாக நடத்தி, சற்றேறக்குறைய 2 இலட்சத்து 78 ஆயிரத்து 619 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுத் தந்திருக்கிறோம் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

50 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஆணைகளை, முன்னாள் முதலமைச்சர் அவர்களே வழங்கினார்கள். அது எங்கு என்றால், சென்னை, Crescent college-ல் நடைபெற்ற விழாவில், அந்த ஒரு வேலைவாய்ப்பு முகாமில் மட்டும் கலந்து கொண்ட இளைஞர்களின் எண்ணிக்கை 72 ஆயிரம். அந்த வேலை வாய்ப்பு முகாமில் 7 ஆயிரத்து 800 நபர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு, 100-வது வேலை வாய்ப்பு முகாம் சென்னையில் இருக்கக் கூடிய The New College-ல் நடந்தது. அதில் ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

ITI-ஐப் பொறுத்தவரையிலும், ஏற்கெனவே, கடந்த, சுதந்திரம் சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகிய இந்த நாட்டில், மொத்தம் இருந்த ITI-களின் எண்ணிக்கை 91. நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அந்த 5 ஆண்டு காலங்களில் கொண்டு வரப்பட்ட ITI-களின் எண்ணிக்கை 41. கிட்டத்தட்ட 290 கோடி ரூபாய்க்குமேல் இதற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அந்த ITI-ல் படித்த மொத்தம்—அதில் மிகப்பெரிய சிறப்பு என்னவென்றால், எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், Tata Technologies நிறுவனத்துடன் ஒரு உடன்பாடு செய்து 2,877.43 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, உலகத் தரத்திலான கட்டுமானத்தை உருவாக்கி, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில், வெளிநாடுகளில் வேலை செய்யக்கூடிய... ஆகவே, அவ்வாறு சிறப்பாக செயல்பட்ட ஆட்சி எங்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு,

**1,724 நாட்களில் 15,117 கோப்புகளில் கையெழுத்திட்டார் எங்கள் முதல்வர்**

பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவாக ஒரு ஆட்சி பொற்கால ஆட்சி என்றால், அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்றிருப்பதே ஆகும். ஒரு ஆட்சி பொற்கால ஆட்சி என்றால், அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி பெற்றிருப்பதே! திராவிட மாடல் ஆட்சி நடத்திய எங்கள் தலைவர், தளபதி அவர்கள், முன்னாள் முதல்வராக இருந்த காலத்தில் 1,724 நாட்களில் 15,117 அரசு கோப்புகளில் கையொப்பமிட்டு இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவிக்க விரும்புகிறேன். 8,685 அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருக்கிறார். 173 முறை மாவட்டங்களுக்கு சுற்றுப் பயணம் செய்து அரசுப் பணிகளை செயல்படுத்தியிருக்கிறார். இவ்வாறு மக்களுக்காக அயராது உழைத்த எங்களுடைய முன்னாள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய பணிகள், மக்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

அந்த மாவட்டத்தில்தான் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டாசுத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. நம்முடைய முன்னாள் அமைச்சர் அண்ணன் K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களும், நம்முடைய முன்னாள் அமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களும் மிகத் தெளிவாகச் சொன்னார்கள், அவர்களுக்கும் தெரியும். இப்போதிருக்கிற அமைச்சர்களைப்போல நாங்களும் ஆய்வு செய்து நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களை suspend செய்து வைத்திருந்தோம். அவை இயங்காத வகையில் suspend செய்து வைத்திருந்தோம்.

நம்முடைய அண்ணன் அவர்கள் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர் என்பதால், அப்போது அங்கு இருக்கக்கூடிய association-ஐச் சேர்ந்தவர்களெல்லாம் சென்று அவரை நேரடியாகச் சந்தித்துப் பேசினார்கள். அப்போது அந்த association-ஐச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள், கணேசன், Labour Department Minister ஆக இருக்கும்போது காலதாமதமில்லாமல் வேகமாக வேலைகள் நடைபெறுகின்றன என்று அந்த

association-ல் இருப்பவர்களே வந்து நேரடியாகப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தரவுகளெல்லாம் இல்லையென்று சொன்னார்கள். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். தரவுகளெல்லாம் இல்லையென்று சொன்னார்கள். தரவுகள் இல்லாமல் எப்படி 35 இலட்சத்து 9 ஆயிரத்து 833 தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களைக் கொடுக்க முடியும்? 3 ஆயிரத்து 134 கோடி ரூபாய் நலத் திட்டங்கள் எவை அழிந்துபோனாலும், அந்தத் தரவுகள் எப்போதும் அந்த அலுவலகத்தில் இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சி.வெ.கணேசன் பேசினார்.